

2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொகுதிவாரியாக பார்வையாளர்களை நியமித்துள்ளார்கள். சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்நிலையில், கழக இளைஞர் அணியினர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு பணிகளை தொடங்கியுள்ள, இளைஞரணியின் மாநில துணைச் செயலாளர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் நிகழ்வு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் நடைபெற்றது. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்த்து துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். உடன் அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### திருவாரூர் மாவட்டம் – ஓடாச்சேரி கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.29-**

**திருவாரூர் மாவட்டம், ஓடாச்சேரி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி – அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பான, முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம், கல்லிக்குடி வருவாய் கிராமம், வடக்குவெளியைச் சேர்ந்த அஜித்குமார் (வயது 27) என்பவர் நேற்று (27.10.2024) ஓடாச்சேரி கிராமத்தி லுள்ள மின்மாற்றியில் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி மயக்கமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, 99வது வார்டு, ராதாகிருஷ்ணபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியை நேற்று (28.10.2024) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். இந்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி, 99 வது வட்டக் கழகச் செயலாளர் ஆரம்.ரங்கநாதன்,ராம் முரளி, செபாஸ்டியன், சுகுமார், புரசை ரவி, சண்முகம்,ரசாக் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் மதிவேலன், திட்டப்பகுதி பொறியாளர் பிளம்மிங் பிரகாஷ், 99வது கோட்டம் பொறியாளர் கே.சிவகுமார், மின் துறை பொறியாளர் கே.கந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### எழும்பூர், ராதாகிருஷ்ணபுரத்தில்

# நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

*சென்னை, அக்.29-*

*எழும்பூர், ராதாகிருஷ்ணபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கட்டிமுடிக்கப்பட்ட நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய168 வீடுகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கையை கேட்டறிந்தார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (28.10.2024) எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, 99வது வார்டு, ராதாகிருஷ்ணபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.*

*சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி வார்டு 99க்கு உட்பட்ட நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ராதாகிருஷ்ணபுரம் திட்டப்பகுதியில் இருந்த குடிசைமாற்று வாரிய குடியிருப்பு 2020ல் இடிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருந்த கட்டுமானப் பணிகளை கழக ஆட்சி அமைந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இக்குடியிருப்பின் கட்டுமான பணிகள் தாமதமாவதால் குடியிருந்தோர் படும் வேதனைகளை எடுத்து சொல்லி கட்டுமானப்பணிகளை துரிதப் படுத்தியதன் காரணமாக கட்டிமுடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு தயாராக உள்ள 168 வீடுகளுக்கு 28.10.2024 திங்கட்கிழமையான இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கையை கேட்டறிந்தார்.*

*இந்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி, 99-வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.ரம்.ரங்கநாத,ராம் முரளி, செபாஸ்டியன், சுகுமார், புரசை ரவி, சண்முகம்,ரசாக் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் மதிவேலன், திட்டப் பகுதி பொறியாளர் பிளம் மிங் பிரகாஷ், 99வது கோட்டம் பொறியாளர் கே.சிவகுமார், மின் துறை பொறியாளர் கே.கந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.*

